இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விசேட தேவைகள்சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNE6546/ESE6246 – உள்ளடங்கல் வகுப்பறையில் உள்ள பிள்ளைகளுக்கான கலைத்திட்ட விருத்தியும் தழுவலும்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி I இன் சகல வினாக்களுக்கும் விடையளிப்பதோடு பகுதி II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 25.07.2021 நேரம் : பி.ப 01.30 - பி.ப 04.30

## பகுதி I

1. சாதாரண கலைத்திட்டத்தின் மூன்று (03) வேறுபட்ட அம்சங்களை சுருக்கமாக விளக்குக.

2. கலைத்திட்ட இசைவாக்கம் (Accommodations) கலைத்திட்ட மாற்றியமைப்பு (Modifications) ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாடுகளை விளக்குக.

3. விசேட கல்வித் தேவைகள் உள்ள ஒரு பிள்ளை வகுப்பறையில் பணிகளைச் செய்வதற்காக நேரம் தொடர்பான இசைவாக்கத்தை எவ்வாறு மேற்கொள்வீர்?

4. விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகளின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் உலகளாவிய வடிவமைப்பின் (Universal Design) செல்வாக்கினைப் பரிசீலனை செய்க.

5. ஒரு ஆசிரியராக நீங்கள் வகுப்பறையில் மாணவர்களின் கற்றலுக்கான ஆயத்த மட்டத்தை எவ்வாறு அறிந்து கொள்வீர்?

6. வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் முறைமையின் (Differentiated Instructions) அடிப்படையில் செயன்முறைகளை எவ்வாறு வேறுபடுத்துவீர் என்பதை பரிசீலிக்குக.

7. புளூமின் வகைப்பாட்டின் (Bloom's Taxonomy) அடிப்படையில் உயர் அறிவாற்றல் திறன்கள் மூன்றினை (03) பட்டியற்படுத்தி எவையேனும் இரண்டு (02) வகையான உயர் அறிவாற்றல் திறன்களை மதிப்பிடும் வகையில் இரண்டு (02) வினாக்களை உருவாக்குக.

8. விசேட கல்வித் தேவைகளையுடைய பிள்ளைகளுக்காகப் பயன்படுத்தக்கூடிய மூன்று (03) தொழிநுட்பக் கருவிகளையும் அவற்றின் பயன்பாட்டின் நோக்கையும் குறிப்பிடுக

(8 x 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9\. i. ஹவார்ட் கார்டினரால் (Harward Cardenes )முன்வைக்கப்பட்ட பல்வகை நுண்மதிகளில் ஐந்தினைக் (5) குறிப்பிடுக.

(5 புள்ளிகள்)

ii. பல்வகைப்படுத்தப்பட்ட/வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் முறைமையில் பல்வகை நுண்மதிக் கொள்கையின் செல்வாக்கினைப் பரிசீலனை செய்க.

(5 புள்ளிகள்)

iii. மூன்று (3) வகையான நுண்மதிகளைத் தெரிவு செய்து அவற்றை உள்ளடக்கல் வகுப்பறை ஒன்றில் எவ்வாறு பிரயோகிப்பீர் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

10\. i. வேறுபடுத்தப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமையின் அடிப்படையில் உருவாக்கம்/விளைவு (Product) என்ற பதத்தினால் நீர் கருதுவது யாது?

(4 புள்ளிகள்)

ii. மாணவர்களின் கற்றலின் உருவாக்கம்/விளைவு வேறுபடுத்தப்படாத கற்றல் கற்பித்தலின் பாதிப்புக்கள் இரண்டினை (2) உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(6 புள்ளிகள்)

iii. நீங்கள் வகுப்பறையில் கற்பிக்கும் அலகு ஒன்றினைத் தெரிவு செய்யுங்கள். குறித்த அலகினை அடிப்படையாகக் கொண்டு கற்றல் உருவாக்கம்/விளைவினை எவ்வாறு வேறுபடுத்துவீர்.

(10 புள்ளிகள்)

11\. i. விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கு கற்பிப்பதில் கற்றலுக்கான உலகளாவிய வடிவத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. கற்றலுக்கான உலகளாவிய வடிவத்தினை இலங்கை பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதில் உள்ள வரையறைகளும் வாய்ப்புக்களும் யாவை?

(10 புள்ளிகள்)

12\. உள்ளடக்கற்கல்வி எண்ணக்கருவின் அடிப்படையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் பொதுவான கலைத்திட்டத்தின் கீழ் கல்வி பயிலக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

i. விசேட கல்வித் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு சாதாரண கலைத்திட்டத்தில் எவ்வித மாற்றங்களையும் மேற்கொள்ளாது பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை?

(8 புள்ளிகள்)

ii. சாதாரண வகுப்பறைகளில் விசேட கல்வித் தேவைகளையுடைய பிள்ளைகளுக்கான கலைத்திட்டத்ததை இசைவாக்கல் மற்றும் மாற்றியமைத்தல் ஆகியனவற்றின் முக்கியத்துவத்தினை உதாரணங்களை முன்வைத்து நியாயப்படுத்துக.

(12 புள்ளிகள்)

13. ஒரு மாணவன் கற்றலில் சராசரியாக இயலுமையைக் கொண்டுள்ளான். இருப்பினும் அவன் ஒரு விடயத்தில் தொடர்ச்சியான கவனம் செலுத்துவதில் வரையறைகளைக் கொண்டுள்ளான். அவனது சோதனை முடிவுகள் அவனது தேர்ச்சியின் உண்மையான மட்டத்தினை காட்டவில்லை.

i. மாணவரின் இயல்பை அடிப்படையாகக் கொண்டு பாடத்தைக் கற்பிக்கும் மட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என நீர் கருதுகின்றீரா? உங்களது பதிலுக்கான காரணத்தை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

ii. மாணவனின் இயல்புகளுக்கமைய மதிப்பீட்டு முறைகளளில் எவ்வாறான தழுவல்களை மேற்கொள்வீர்? பொருத்தமான உதாரணம் தருக.

(10 புள்ளிகள்)

14. i. கற்றலுக்கான உலகளாவிய வடிவத்தின் மூன்று (03) தத்துவங்களை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

ii கற்றலுக்கான உலகளாசிய வடிவத்தின் மூன்று (03) தத்துவங்களுக்கும் மூளையின் மூன்று (03) வலையமைப்புகளுக்கும் இடையேயான தொடர்பினை பரிசீரலிக்குக.

(10 புள்ளிகள்)

"பதிப்புரிமை பெற்றது"